**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை - **திரு T. சோழவேந்தன்., B.A.B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

-------

2023-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 01-ம் நாள் செவ்வாக்கிழமை

------

**இடைமனு எண். 04/2023 -ல் அசல் வழக்கு எண்.107/2017**

1. வசந்தா (இறந்தார்) ..வாதி
2. குருமூர்தி
3. தேவிகா
4. ராஜலெட்சுமி
5. ராதிகா
6. சிவக்குமார் ..மனுதார்ர்கள்/இறந்த வாதியின் வாரிசுகள்

...எதிர்...

வசந்தா ..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 25.07.2023 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர்.கார்த்திக்ராஜன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. இ.செல்வராஜ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் அசல் வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதி கோரி இம்மனு உ.வி.மு.ச. கட்டளை-6, விதி-17-ன் படி மனு மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்**

மனுதாரர் இந்த மனுவின் 6-ம் மனுதாரர் ஆவார். 2 முதல் 5 வரையுள்ள மனுதாரர்கள் 6-ம் மனுதாரரின் சகோதரர்கள். அவர்களுக்காகவும் இந்த மனுவை 6-ம் மனுதாரர்/வாதியின் வாரிசின் சார்பாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இறந்த வாதி, சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி அசல்

வழக்கு தாக்கல் செய்திருந்தார். மேற்படி அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது வாதி கடந்த 04.02.2018-ம் தேதியன்று இறந்துவிட்டார். இறந்த வாதிக்கு 2 முதல் 5 வரையிலான மனுதாரர்கள் சட்ட படியான வாரிசுதாரர்கள். மேற்படி இறந்த வாதிக்கு வாரிசு மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் படி அசல் வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் நியாயமாகவும் உள்ளது. இல்லையெனில் 6-ம் மனுதாரர்/வாதியின் வாரிசுதார்களுக்கு பெருத்த நஷ்டமும், கஷ்டமும் ஏற்படகூடும். எனவே மேற்கண்ட காரணங்களுக்காக 6-ம் மனுதாரர்/வாதியின் வாரிசுதாரர் தாக்கல் செய்யத வழக்குரையை திருத்தம் செய்ய கோரியுள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. எதிர்மனுதார்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணையின் சுருக்கும்.**

இம்மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை எதிர்மனுதாரர்கள் வன்மையாக மறுக்கின்றார்கள். மனுதாரர்/வாதி உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யான சங்கதிகளை கூறி மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த மனு சட்டப்புடியும், நியாயப்படியும் சரியல்ல. மனுதாரரர் மனுவுடன் கூறப்பட்டுள்ள காரணங்களுக்கு எந்த வித ஆதாரமும், ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே 6-ம் மனுதாரர்/இறந்த வாதியின் வாரிசு தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. **இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை**

மனுதார்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

4. இம்மனுவில் மனுதார்கள் மற்றும் எதிர்மனுதாரர் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. **தீர்வு**

மனுதாரர் தரப்பில், மனுதாரர் இந்த மனுவின் 6-ம் மனுதாரர் என்றும், 2 முதல் 5 வரையுள்ள மனுதாரர்கள் 6-ம் மனுதாரரின் சகோதரர்கள் என்றும், அவர்களுக்காகவும் இந்த மனுவை 6-ம் மனுதாரா்/வாதியின் வாரிசின் சார்பாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், இறந்த வாதி, சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றும், மேற்படி அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது வாதி கடந்த 04.02.2018-ம் தேதியன்று இறந்துவிட்டார் என்றும், இறந்த வாதிக்கு 2 முதல் 5 வரையிலான மனுதாரர்கள் சட்ட படியான வாரிசுதாரர்கள் என்றும், மேற்படி இறந்த வாதிக்கு வாரிசு மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் படி அசல் வழக்குரையை திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் நியாயமாகவும் உள்ளது என்றும்,

இல்லையெனில் 6-ம் மனுதாரர்/இறந்த வாதியின் வாரிசுதார்களுக்கு பெருத்த நஷ்டமும், கஷ்டமும் ஏற்படகூடும் என்றும், எனவே மேற்கண்ட காரணங்களுக்காக 6-ம் மனுதாரர்/வாதியின் வாரிசுதாரர் தாக்கல் செய்யத வழக்குரையை திருத்தம் செய்ய கோரியுள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

**6.** எதிர்மனுதார்/பிரதிவாதி தரப்பில், 6-ம் மனுதாரர்/இறந்த வாதியின் வாரிசு உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யான சங்கதிகளை கூறி மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்த மனு சட்டப்புடியும், நியாயப்படியும் சரியல்ல என்றும், மனுதாரர் மனுவுடன் கூறப்பட்டுள்ள காரணங்களுக்கு எந்த வித ஆதாரமும், ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் எனவே 6-ம் மனுதாரர்/இறந்த வாதியின் வாரிசு தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

**7.** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கை இறந்த வாதி எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்தது என தெரியவருகிறது. இம்மனுவானது அசல் வழக்கில் வாதி கடந்த 04.02.2018 அன்று இறந்துள்ள நிலையில் அசல் வழக்கினை தொடர்ந்து நடத்துவதற்காக இறந்த வாதியின் வாரிசுகள் வாரிசு மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனுவானது கடந்த 01.11.2022 அன்று அனுமதிக்கப்பட்ட நிலையில் 1-ம் மனுதாரர்/இறந்த வாதியின் வாரிசு வழக்குரையில் திருத்தம் பரிகாரம் கோரி திருத்தம் செய்ய வேண்டிய அவசியமும், நியாயமாகவும் உள்ளதாக கோரப்பட்டுள்ள இம்மனுவை அனுமதித்தால் பிரதிவாதிகளுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மனுதாரா் இம்மனுவில் கோரியுள்ள திருத்தத்தை அனுமதிப்பதால் வழக்கின் வழக்கு மூலமோ, வழக்கின் தன்மையோ மாறிவிடப்போவதில்லை என்பதாலும், மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் பின்னிட்டு ஏற்படும் (Multiplicity Proceedings) ஒரே பொருண்மையின் அடிப்படையில் ஏற்படும் வழக்கு நடிவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டு தரப்பினா்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனுதாரரின் வழக்குரையை திருத்தம் செய்ய கோரியுள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்றும் மனுவின் தன்மை கருதி தரப்பினா்கள் அவரவா் செலவுத்தொகையை அவரவா்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிச்சனைக்கு தீர்வு காண்கிறது.

இறுதியில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

பின் இணைப்பு

| | |
|---|---|
| மனுதாரரகள் தரப்பு சாட்சிகள் | - இல்லை- |
| மனுதாரர்கள் தரப்பு சான்றாணங்கள் | - இல்லை- |
| எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் | -இல்லை- |
| எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | - இல்லை- |

(ஓம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடை மனு எண்.04/2023-ல்
அசல் வழக்கு எண்.107/2017
நாள் - 01.08.2023.